# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## CC. No.1635/2022 P.W.5

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | தவமுனி | த-பெ | ராஜாங்கம் |
| ஊர்: | : | மதுரை | | |
| வயது: | : | 45/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | சார்பு ஆய்வாளர், இராமநாதபுரம் நகர் காவல் நிலையம் | மாவட்டம் | மதுரை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **09.06.2026**

**எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் மதுரையில் வசித்து இராமநாதபுர நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு காரைக்குடி தெற்கு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக 21.08.2020 அன்று 04.00 மணிக்கு நிலைய பணியில் இருந்தபோது தாரணி என்பவர் நிலையம் ஆஜர் ஆகி கொடுத்த புகாரைப்பெற்று நிலைய குற்ற எண். 393/2020 பிரிவுகள் 294(b), 336,506(II) ன் இதச பிரிவுகளின் கீழ் சிறப்பு சார்பு ஆய்வாளர் ராமகிருஷ்ணன் வழக்கு பதிவு செய்தார். பின்னர் வழக்கு கோப்பை மேல் விசாரணைக்காக எனது வசம் ஒப்படைத்தார். **புகார் அசாஆ 4. முதல் தகவல் அறிக்கை அசாஆ 5.** பின்னர் இந்த வழக்கின் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 4 வரையிலானவர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இந்த வழக்கின் சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகள் பிரேம் குமார் மற்றும் வீரபாண்டியன் ஆகியோர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் ஆகியவை தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அசாஆ 6. பார்வை மகஜர் அசாஆ 7.**

வழக்கு சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் எதிரியை தேடி சென்ற நிலையில் 23.08.2020 அன்று அரியக்குடி இரயில்வே கேட் அருகில் நின்று கொண்டிருந்த வழக்கின் எதிரியை 12.30 மணிக்கு காரணம் கூறி கைது செய்து நிலையம் அழைத்து வந்து தக்க வழிகாவல் மூலம் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் இந்த வழக்கின் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் திரு.ராஜசேகர் மற்றும் திருமதி சுப்ரியா ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர்களிடம இருந்து விபத்து பதிவேடுடன் கூடிய காய சான்றிதழ் மற்றும் மருத்துவஅறிக்கை பெற்றேன். **விபத்து பதிவேடுடன் கூடிய காய சான்றிதழ் அசாஆ 8. மருத்துவ அறிக்கை அசாஆ 9.** பின்னர் வழக்கின் தன்மைக்கு ஏற்ப வழக்கின்

சட்டப்பிரிவை மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாற்று அறிக்கை கனம் நீதிமன்றத்தில் சமர்பித்தேன். **சட்டப்பிரிவு மாற்று அறிக்கை அசாஆ 10.** பின்னர் இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் ராமகிருஷ்ணன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகள் 1 முதல் 9 வரையிலானவர்களை விசாரணை செய்து 17.09.2020 அன்று மேற் சொன்ன பிரிவுகளின் அடிப்படையில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரை முறையாக புலன் விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கின் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. குற்ற இறுதி அறிக்கையில் கூறியது போல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த புகார் மற்றும் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கின் புகார்தாரர் பிறழ்சாட்சியாக மாறிய விபரம் தெரியுமா என்றால் தெரியும்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.06.09 17:29:03 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.